# வள்ளுவம் உணர்த்தும் உயிரினம் சார் கட்டுப்பாடுகள்

**முனைவர் ச. கௌசல்யா**
**உதவிப்பேராசிரியர்**
**தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி – 620 002**
kowsi.kowsalya84@gmail.com

2

**ஆய்வுச் சுருக்கம்**

உலகம் போற்றும் திருக்குறள் நூலானது வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை கருத்துக்களை உணர்த்துகிறது. உலகத்தின் அனைத்து உயிரினங்களும் பரிவுடன் தமது இயற்கை மற்றும் உணர்ச்சிகளை உணர்ந்து வாழ வேண்டும் என்கிறது. திருக்குறளில் உயிரினம் பற்றிய பல முக்கிய கட்டுப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. உயிரினங்களைச் சார்ந்த வாழ்வு தத்துவங்கள்; மற்றும் பண்புகளை வள்ளுவம் எடுத்துரைக்கும் விதத்தினை ஆய்வதே இக்கட்டுரையாகும்.

**திறவுச் சொற்கள்**

என்பு - எலும்பு, கூகை -ஆந்தை, நச்சு -உடலுக்கு,தீங்கு விளைவிக்கும் பொருள், எழுமை- ஏழு முறை பிறக்கும் பிறப்பு,அமர் -போர்

**முன்னுரை**

**உயிரினம்** என்பது நிலம், நீர், காற்றில் காணப்படும் உயிர் வாழும் பண்புடைய அனைத்துவகை நுண்ணுயிர்கள், தாவரங்கள், பூச்சிகள், விலங்குகள் போன்றவற்றைக் குறிக்கும். வாழும் உயிர்த்தொகுதிகளனைத்தும் உயிரினங்களாகும். ஒன்றாக தொகுக்கப்பட்ட மூலக்கூறுகள் செயல்பட்டு அதிகமாகவோ அல்லது பகுதியளவோ நிலைப்புத்தன்மையுடையன வாழ்வியல் பண்புகளை வெளிப்படுத்துபவை. திருக்குறளில் வள்ளுவர் உயிரினங்கள் சார்ந்த பலவற்றையும் மனித வாழ்வியலோடு இணைத்து விளக்குகின்றார். மக்களின் நல்வாழ்விற்குரிய கருத்துக்களை வலியுறுத்துவதற்கு பல்வகை உயிரினங்களை உவமைமையகளாக்கி விளக்கியுரைக்கின்றார்.

**மரமும் புழுவும்**

ஒருவன் தான் பெற்ற செல்வத்தை பிறருக்குக் கொடுத்து உதவுதல் வேண்டும். அவ்வாறு பிறருக்கு உதவி செய்யாமல் பிறரால் விரும்பப்படாத ஒருவன் பெற்ற செல்வம் பயனற்றது. அது ஊரின் நடுவே நச்சுமரம் பழுத்தது போன்றதாகும் என்பதை மரத்தின் தன்மையைக் கொண்டு வள்ளுவர் விளக்குகிறார். இதனை

**"நச்சுப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று" (குறள்: 1008)**

என்ற குறள்வழி அறியலாம். கூடா ஒழுக்கமுடையவரின் இயல்பினை விளக்கும்போது

**":புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூங்கிற் கரியார் உடைத்து"**

என்கிறார். கூடாஒழுக்கமுடையவரின் போலி வேடத்தையும் வஞ்சக உள்ளத்தையும் குன்றிமணியின் செந்நிறமும் அதன் மூங்கிலில் காணப்படும் கருநிறமும் உணர்த்துவதாக உவமையாக்கித் தெளிவுபடுத்துகிறார். புழு பூச்சி போன்றவை எலும்பற்று பிறப்பதைப் போன்று மனிதர்கள் யாவரும் அன்பற்று பிறப்பதில்லை. ஆகவே அன்பை வளர்த்து நல்லுறவோடு உலக மக்கள் வாழ வேண்டும் என்பதை

**"என்பில் அதனை வெயில்போலக் காயுமே**
**அன்பில் அதனை அறம்"**

என்ற குறள்வழி தெளிவுபடுத்துகிறார். எழும்பு இல்லாத சிறு புழுவினை வெயில் அழிப்பது போல அன்பு இல்லாத மக்களை அரம் அழித்துவிடும் என்கிறார்

**நீர்வாழ் உயிரினம்**

ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையும் அடக்க வல்லானின் வன்மை அவனுக்கு ஏழு பிறப்பின் கண்ணும் அரண் போல பாதுகாப்பைத் தரும். எனவே ஆமை போல ஐம்புலன்களையும் அடக்க வேண்டும் என்று உவமையாக்கிக் கூறுகின்றார். இதனை

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

என்ற குறளில் வெளிப்படுத்துகிறார். ஒருவர் வாழ்வில் வெற்றி பெற இடனறிந்து செயல்படுதல் வேண்டும். அக்கட்டுப்பாடு அவன் மதிப்பை மேன்மேலும் உயர்த்தும். இதனை வள்ளுவர் முதலையைக் கொண்டு உணர்த்துகிறார்.

**“நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற”**

இக்குறளில் முதலை ஆழமுடைய நீரின்கண் பிறவற்றையெல்லாம் தான் வெல்லும். ஆனால் அந்நீர்நிலை விட்டு நீங்கின் பிறவெல்லாம் அம்முதலையை வெல்லும் நிலை உண்டாகும். ஆகையால் எல்லோரும் தத்தம் தம் இடத்தில் வலியவர் என்பது புலனாகின்றது.

அறிவுடையோர் பலர் இருப்பினும் அவரின் ஆசையைத் தூண்டி அறிவை மழுங்கச் செய்து துன்பத்தில் ஆழ்த்தும். இதனைத் தற்காலத்திலும் பெரும்பான்மையாக நம்மால் காணமுடிகின்றது. இக்கருத்தை அறிவுறுத்த முனைந்த வள்ளுவர்

**“வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்**
**தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று”**

இக்குறளின் உவமையின் வழி எடுத்தியம்புகிறார். தாம் வெல்லும் ஆற்றல் உடையவராயினும் சூதாட்டத்தை விரும்பாது ஒழிக்க வேண்டும். வென்றாலும் கூட அப்பொருள் தூண்டிலில் காணப்பெறும் இரையால் மறைந்த இரும்புத்துண்டினை விரும்பி விழுங்கிச் சிக்கிக் கொள்ளும் மீனின்; செயல்போன்றது என்று தெளிவுறுத்துகின்றார்.

**விலங்கினம்**

விலங்கு என்ற சொல்லினை திருவள்ளுவர் கல்லாமை என்ற அதிகாரத்தில் பயன்படுத்தியுள்ளார். இல்லத்து மனையாள் தம் புகுந்தகத்துக்கு நற்புகழைத் தேடித்தரும் பண்புடையவளாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் ஆண்மகனின் நிலை சமுதாயத்தில் இழிந்து காணப்படும். இதனை

**“புகழ்புரிந்த இல்இல்லார்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடுநடை”**

என்று விளக்குகிறார். நல்ல மனையாளைப் பெறாதவனால் சமுதாயத்தில் இகழ்ந்து பேசுவோரின் முன் சிங்கம் போல பெருமிதத்தோடு நடக்க முடியாமல் போகும். மனதை நேர்வழியில் செலுத்த இயலாமல் ஆசைகளை அடக்கமுடியாமல் பிறரை வஞ்சித்து

அவர்க்குரியவற்றை துய்க்க விரும்பும் நிலையில் வாழும் பொய்யான துறவிகளைக் குறிப்பிடும்போது புலித்தோலைப் போர்த்திய பசு என்கிறார். இவ்உண்மையுணராத மக்கள் போற்றி புகழுதலையும் செய்யும் அறிவின்மையையும் தெளிவுபடுத்துகிறார்.

**“வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று”**

நட்பு என்னும் பெரும்பொருள் பற்றி கூறவந்த வள்ளுவர் பல அதிகாரங்களிலும் நட்பின் தன்மைகளை விளக்கியுரைக்கிறார். தீயகுணமுடையருடன் நட்பு கொள்ளுதல் ஒருநாளும் நன்மை தராது என்கிறார். சில நண்பர்கள் துன்பம் வரும் காலத்தில் கைவிட்டு ஓடி விடுவர். அத்தகையோர் போர்க்களத்திலே கைவிட்டோடும் கல்லாத குதிரையைப் போன்றவர் என்பதனை

**“அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை”**

என்ற குறளில் விளக்கும்போது குதிரை போன்ற குணமுடையோருடன் நட்பு கொள்வதைக் காட்டிலும் தனித்து இருப்பது சிறந்தது என்கிறார்.

உயிரைக் காட்டிலும் மானம் சிறந்தது என்று எண்ணி வாழ்ந்தனர் என்பதனை “உயிரின் சிறந்தன்று நாணே” என்று தொல்காப்பியர் எடுத்துக்காட்டுகிறார். மானத்தை உயிர்போல கருதி வாழ வேண்டும். இதற்கு உவமையாக கவரிமானைச் சுட்டுகிறார். தம் மயிர்த்திரளின் ஒருமயிர் நீங்கிடுனும் அவமானமென்று எண்ணி உயிர்வாழாத கவரிமானைப் போன்றோர் மானமுடையோர் என்பதை

**“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்”**

என்ற குறள் வழி எடுத்தியம்புகின்றார்.

**புள்ளினம்**

தொல்காப்பியர் கருப்பொருள் பற்றி குறிப்பிடும்போது “தெய்வம் உணாவே மா மரம் புள் ….:” என்றும் “எந்நில மருங்கினும் பூவும் புள்ளும்” என்றும் எடுத்துரைக்கிறார். திருவள்ளுவர் ஐந்து குறள்களில் பறவை பற்றிக் குறிப்பிடுகின்றார். காலத்தையும் இடத்தையும் இனிதுணர்ந்து செயல்பட முற்படுவோர் இவ்வுலகத்தையே கைக்கொள்ள நினைத்தாலும் கைக்கூடும் என்று தெளிந்துரைக்கின்றார். இதற்கு உவமையாக

காகத்தையும் கூகையையும் காட்டுகின்றார். தன்னைக் காட்டிலும் வலிமையுடைய கூகையைக் காக்கை பகலில் வென்று விடும். இதனை

**“பகல்வெல்லும் கூகையை காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது”**

என்ற குறள்வழி தெளிந்துரைக்கின்றார்.

**முடிவுரை**

வள்ளுவர் வாழ்வில் மனிதன் கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை உணர்த்துவதற்கும் நல்வாழ்வியல் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் உயிரினங்களை உவமைகளாக்கியுள்ளார். இதன்வழி உயிரினங்களின் பல்வேறு இயல்புகளை வெளிப்படுத்தியுள்ளார். இந்த கட்டுப்பாடுகள், மனிதர் மற்றும் உயிரினங்களின் சமத்துவமான மற்றும் அறியப்பட்ட வாழ்க்கை வழிகாட்டுதல்களாகக் கருதப்படுகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1.அமிர்தலிங்கன் பூ — வள்ளுவர் கண்ட உயிரினங்கள்
சௌத் இந்தியா பிரஸ் காரைக்குடி
இரண்டாம் பதிப்பு – 1962

2.பாலசுப்பிரமணியன் கு.வெ — தொல்காப்பியம் மூலமும் உரையும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை
வெளியீடு - 2019

3.நாராயணசாமி இரா — திருக்குறள் இனிய உரை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை
இருபத்தி மூன்றாம் பதிப்பு - 2023